# NEWS CLIPPING

| | |
|---|---|
| Headline: | **Reading Corners for Indian students by GAB Foundation** |
| Publication : | **Makkal Osai** |
| Section : | **General News** |
| Page : | **-** |
| Date : | **26 February 2011** |



ஆங்கிலம் கற்கும் பத்துமலை தமிழ்ப்பள்ளி மாணவர்களுடன் ரேணுகா ராஜா



பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ்ப்பள்ளி மாணவர்களுடன்

## இந்திய மாணவர்களுக்கான ஆங்கில மொழி திட்டங்கள்

# ஜி.ஏ.பி. அறவாரியத்தின் மாபெரும் முயற்சி

**கோமகள் காயத்ரி -**
**படங்கள்:**
**மா.பவளச்செல்வன்**

கோலாலம்பூர், பிப்.26–

இந்திய மாணவர்கள் ஆங்கில மொழியில் பின்தங்கி விடக்கூடாது எனும் நல்லெண்ணத்தில் கின்னஸ் ஏங்கர் பெர்ஹாட் நிறுவனத்தின் ஜி.ஏ.பி. அறவாரியம் ஆரம்பப் பள்ளி மாணவர்களின் ஆங்கில மொழி ஆற்றலை வலுப்படுத்த பள்ளிகளில் 'ரீடிங் கோர்னர்' எனும் வாசிக்கும் பகுதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

சபா, சரவாக் மாநிலங்கள் உட்பட மலேசியா முழுவதும் மொத்தம் 35 வாசிக்கும் பகுதிகளை பள்ளிகளில் அந்த அறவாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது. பள்ளிகள் இல்லாத 12 உட்புறப் பகுதிகளில் 12 கல்வி மையங்களையும் ஜி.ஏ.பி. அறவாரியம் அமைத்துள்ளது.

இந்த வாசிக்கும் பகுதிகளில், மாணவர்களுக்கான கதை, அறிவியல், என்சைக்கோலோபீடியா, வழிகாட்டி புத்தகங்கள் உள்ளன.

வாரம் ஒருமுறை சனிக்கிழமைகளில் மொத்தம் 5 பள்ளிகளில் ஆங்கில வகுப்புகளும் இடம் பெறுகின்றன. மாணவர்களுக்குப் புரியும் வகையிலும், ஆங்கில மொழியைத் தயங்காமல் கற்றுக் கொள்வதற்கு ஏதுவாகவும் மாணவர்களுக்கு பாடல், கதைகள் மூலம் ஆங்கில மொழி கற்றுக் கொடுக்கப்படுகிறது.

தற்போது மொத்தம் 210 மாணவர்கள் இந்த ஆங்கில வகுப்புகளில் இடம்பெற்றுள்ளனர். அதில் 110 மாணவர்கள் பத்துமலை தமிழ்ப்பள்ளியைச் சேர்ந்தவர்கள் ஆவர். இம்மாணவர்களுக்கு இலவசமாக தன்னார்வ முறையில் ஆங்கில மொழியை கற்றுக் கொடுக்கும் சேவையை பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டுள்ளனர்.

கடந்த 3 ஆண்டுகளாக செயல்படும் இந்த அறவாரியம் பல கல்வித் திட்டங்களை மாணவர்களுக்காக மேற்கொண்டு வருகிறது.



ரேணுகா ராஜா

17ஆம் பக்கம் பார்க்க...